திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே பல வட்டங்கள் பெரிய அளவிலே இருக்கின்ற காரணத்தால், தமிழகத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தைச் செய்ய, தமிழக அரசு ஒரு கமிஷனை நியமித்து, பெரிய தாலுக்காக்களைப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பதில் அளித்துவிட்டேன். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கோட்டங்களினுடைய மைய அலுவலகங்கள் அந்த வருவாய்க் கோட்டத்தினுடைய பகுதிகளுக்கு உள்ளேயே இருக்க வேண்டும் என்ற நியதி வகுக்கப்படுமா? உதாரணமாக சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டத்திற்கு வருவாய்க் கோட்ட அலுவலகம் சென்னை நகரத்தினுடைய மையப் பகுதியாக இருக்கின்ற கிரிம்ஸ் ரோடில் இருக்கிறது. இதுபோன்ற இடங்களை மாற்றுவதற்கு ஏதேனும் நெறிமுறைகள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு ஆலோசிக்கும்; பரிசீலிக்கும்; முடிவு எடுக்கும்.

சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

6344 திரு. பி. என். வல்லரசு:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1989 ஜனவரி முதல் சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எவ்வளவு?

(ஆ) இந்த சேதாரத்தின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) 1989 ஜனவரி முதல் சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 298.

(ஆ) சேதாரத்தினுடைய மொத்த மதிப்பு ரூ.18,11,583.23

1990 சனவரி 20]

9–35 மணி

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் நீண்டதூரப் பேருந்துகள் செல்கின்றன. அப்படி இரவு நேரங்களில் செல்கின்ற நீண்டதூரப் பேருந்துகளை ஓட்டிச் செல்கின்ற ஓட்டுநர் ஒருவரே பல நூறு கிலோ மீட்டர்களுக்கு ஓட்டிச் செல்ல நேரிடுகின்ற காரணத்தினால் அவரது கவனக் குறைவினாலோ அல்லது தூக்க மின்மை காரணத்தினாலோ ஏராளமான அளவில் பொது மக்கள் சேதம் அடைகின்றனர். பேருந்துகளும் சேதம் அடைகின்றன. அவற்றைத் தவிர்க்க அரசு மாற்று நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, நீண்டதூரம் செல்கின்ற பேருந்துகளில் இடையிலே மாற்றுப் பேருந்து ஓட்டுநர்கள் ஓட்டுகின்ற வகையிலே அவர்களுக்குப் பணி நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் நீண்ட தொலைவாக இருக்கின்ற காரணத்தினால் மாற்று ஓட்டுநர்கள் பேருந்துகளை ஓட்டிச் செல்கின்ற ஏற்பாடு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. என். வல்லரசு: துணைத் தலைவர் அவர்களே, அது மிகவும் நீண்டதூரமாக இருக்கின்றது என்று சொல்லக் கூடிய பேருந்துகள் விபத்துகளுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு அதை மாற்றவேண்டுமென்று கோருகிறார்கள். இரவு நேரங்களில் ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்குரிய காலத்தை அரசு இன்னும் குறைக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, நீண்டதூரம் செல்லக்கூடிய பேருந்துகள் விபத்துக்கு ஆளாகாமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவற்றில் இதுவும் ஒரு அம்சமாக பரிசீலிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறைபாடுகள் இருக்குமானால் அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக விரோத சக்திகளினால் சேதம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பேருந்துகள் தீ வைக்கப்பட்டு, தீப்பிடித்துவிடுகின்றன. சில நேரங்களில் மின்சாரக் கோளாறுகள் காரணமாக தீப்பிடிக்கின்றன. இவ்வாறு பேருந்துகளில் ஏற்படும் தீ விபத்தைத் தவிர்க்க, தீயணைப்புக் கருவிகள் அரசுப் பேருந்துகள் அனைத்திலும் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வைக்கப்படவேண்டுமென்ற விதியிருந்தாலும் சில பேருந்துகளில் இல்லாத குறைகளை நீக்குவதற்கு அந்தந்த போக்கு வரத்துக் கழகங்களே நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து முறைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு, சென்னை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், போக்குவரத்து அதிகாரிகளை எல்லாம் வைத்து, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தப் பட்டதை பத்திரிகைகளில் பார்த்தோம். அதேபோல் கோவை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், போக்குவரத்துத் துறை அதிகாரிகளை வைத்து அமைச்சர் அவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்த முன் வருவாரா? மற்ற மாவட்டங்களிலும் இதேபோன்று ஏற்பாடு தொடருமானால், பல கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கும். ஆகவே அந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் பேருந்துகள் ஓடக் கூடிய பகுதிகளைச் சார்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப் பினர்களை அழைத்து அந்த பேருந்துக் கழகங்களுடைய பணிகள் எந்த வகையிலே சிறப்பாக அமையவேண்டுமென்ற ஆலோ சனைகள் எல்லாம் ஏற்கனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று கேட்கப்பட்டுள்ளது. அதேபோன்று மீதி இருக்க கூடிய 14 போக்குவரத்துக் கழகங்களில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து கலந்து பேசுவதாக அரசின் சார்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சட்டமன்றக் கூட்டம் நடந்து முடிந்ததற்குப் பிறகு முறையாக தேதி குறிப்பிடப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து ஆலோசனை களைக் கலப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் போகின்ற லாரிகளும் பஸ்களும் ஒன்றையொன்று கடக்கின்றபோது, 'ஹெட் லைட்டை' அவர்கள் அணைக்காமல் செல்கின்ற காரணத்தி னால், இடையிலே இருக்கின்ற, சாலை ஓரங்களில் உள்ள மரங் களில் மோதி அதிகப்படியான விபத்துக்கள் இன்றைக்கு விளைந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அவற்றைத் தடுக்கின்ற வகையிலே இரண்டு பக்கங்களிலும் 'ஹெட் லைட்' பொருத்தப் பட்டு ஓட்டுகின்ற முறையிலே ஒரு செயற்குறிப்பை அரசு மேற் கொள்ளுமா, விபத்தைத் தடுக்க வழிவகை காணப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

1990 சனவரி 20]

9–40 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற முகப்பு விளக்குகள் இரண்டு பக்கமும்தான் இருக்கின்றன. ஒருவேளை ஒரு பக்கம் லைட்டு மட்டுமே எரிந்து கொண்டு வருவதனால் கூட விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இரண்டாவதாக அதிகப்படியான வெளிச்சங்களைக் கொண்ட விளக்குகள் பொருத்தப்படுகிற காரணத்தால் அவற்றிற்கு பாதி அளவில் மேற்புறத்தில் கருப்பு வர்ணம் கட்டாயமாக அடிக்கப்பட வேண்டுமென்ற விதிமுறைகள் உள்ளன. இவற்றை எல்லாம் தீவிரமாகச் செயல்படுத்த காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சமூக விரோத சக்திகளோடு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி என்றால் கடந்த ஆண்டில் யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக விரோத சக்திகள் எந்த உருவிலே வந்தாலும் அவர்களை அடியோடு களைந்து எறிவதற்கு அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீண்ட தொலைவு இடங்களுக்கு எல்லாம் மாற்று டிரைவர்களை அனுப்புவதாகச் சொன்னார்கள். ஆனால் 450 கிலோ மீட்டர் தூரம் உள்ள பேராவூரணிக்கு ஒரு டிரைவர்தான் சென்று கொண்டிருக்கிறார். அது போன்று தொலைவான இடங்களுக்கு எல்லாம் மாற்று டிரைவர்கள் மிக மிக அவசியம் என்பதை மறு பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யலாம்.

நரிக்குறவர்களுக்கு கடன் உதவி.

* 1344. திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நரிக்குறவர்களுக்கு பாசிமணி வியாபாரம் செய்ய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் உதவி செய்ய ஏதேனும் திட்டம் உள்ளதா?